தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ரூ.100 கோடி மோசடி

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் மீது வழக்கு; 6 இடங்களில் சோதனை

திருச்சியில் மத்திய குற்றப்பிரிவு போலீஸார் புதன்கிழமை சோதனை நடத்திய தென்னூர் அண்ணாநகரில் உள்ள முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் வீடு. (வலது) வீட்டுக்கு வெளியே குவிக்கப்பட்டிருந்த போலீஸார்.

சென்னை/திருச்சி, செப். 16: தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ரூ.100 கோடி மோசடி செய்ததாக பதிவான வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெயரும் சேர்க்கப்பட்டது. அவர் தொடர்புடைய இடங்களில் சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் புதன்கிழமை சோதனை நடத்தினர்.

கடந்த திமுக ஆட்சியின் போது, தனியார் பள்ளி நிர்வாகங்களிடம் நிரந்தர அங்கீகாரம், பள்ளித் தரம் உயர்வு மற்றும் இதர அரசு அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலித்து ரூ.100 கோடி மோசடி செய்த புகாரில், சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் ஏற்கெனவே வழக்குப் பதிந்து சென்னை சாலிகிராமத்தில் 'தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம்' என்ற பெயரில் பதிவு செய்யப்படாத சங்கத்தை நடத்தி வந்த புதுக்கோட்டையைச் சேர்ந்த பி.டி.அரசகுமாரை கடந்த ஜூன் 27-ஆம் தேதி கைது செய்தனர்.

மேலும், வழக்குத் தொடர்பாக 250-க்கும் மேற்பட்டவர்களிடம் போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இந்த முறைகேட்டில் தொடர்புடைய மதுரையைச் சேர்ந்த ஆரோக்கியராஜ், திருச்சி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த சுரேஷ் ஆகியோர் கடந்த ஜூலை மாதம் 24-ஆம் தேதி கைது செய்யப்பட்டனர். அதோடு முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியுடன் நெருக்கமாக இருந்த முத்துக்குமார் என்பவருக்கு எதிராக கடந்த 9-ஆம் தேதி மத்திய குற்றப் பிரிவு போலீஸார் 'லுக் அவுட்' நோட்டீஸ் வழங்கினர்.

அன்பில் மகேஸ் மீது வழக்கு: முன்னதாக, கைது செய்யப்பட்டவர்களை போலீஸார் தங்களது காவலில் எடுத்து விசாரித்த போது, இந்த மோசடியில் அன்பில் மகேஸுக்கு மோசடியில் பங்கு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஆவணங்கள், தடயங்கள், மின்னணு ஆதாரங்கள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அன்பில் மகேஸ் வழக்கில் சேர்க்கப்பட்டார். அவர் மீது மீது ஊழல் தடுப்புச் சட்டம், நம்பிக்கை மோசடி உள்ளிட்ட சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6 இடங்களில் சோதனை: இதன் தொடர்ச்சியாக அன்பில் மகேஸ் தொடர்புடைய இடங்களில் சென்னை காவல் துறையின் மத்திய குற்றப் பிரிவினர் புதன்கிழமை ஒரே நேரத்தில் சோதனை செய்தனர். சென்னை ராஜா அண்ணாமலை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அன்பில் மகேஸ் வீடு, தியாகராயநகர் சரவணா தெருவில் உள்ள வீடு, அலுவலகம், அன்பில் மகேஸின் உறவினர் வாலாடி கார்த்திக்கின் ஆழ்வார்பேட்டை வீடு ஆகிய இடங்களில் சோதனை நடைபெற்றது.

கிரீன்வேஸ் சாலையில் உள்ள அன்பில் மகேஸ் வீட்டில் யாரும் இல்லாததால், மயிலாப்பூர் வருவாய் ஆய்வாளர் தாரணி முன்னிலையில் போலீஸார் சோதனை செய்தனர். தியாகராயநகர் வீட்டின் சாவி இல்லாததால், சுமார் 4 மணிநேர தாமதத்துக்குக்கு பின்னர் மாற்றுச்சாவி மூலம் வீடு திறக்கப்பட்டு, சோதனை நடைபெற்றது.

திருச்சியிலும் அன்பில் மகேஸ் வீடு உள்பட 3 இடங்களில் சோதனை நடந்தது. சென்னை, திருச்சியில் மொத்தம் 6 இடங்களில் சோதனை நடைபெற்றது.

118 ஆவணங்கள் பறிமுதல்: பல மணி நேரம் நடைபெற்ற சோதனையில் வழக்குத் தொடர்பாக பல முக்கிய ஆவணங்கள் கிடைத்ததாக காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. முக்கியமாக சொத்து ஆவணங்கள், வங்கிக் கணக்கு விவரங்கள், காசோலைகள் ஆகியவற்றுடன் சேர்த்து 118 ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அதோடு 18 கைப்பேசிகள், 3 மடிக்கணினிகள், 8 பென் டிரைவ்கள், 2 ஹார்டு டிஸ்குகள், ஒரு கையடக்கக் கணினி, ஒரு ஆப்பிள் ஐபேடு ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அன்பில் மகேஸுக்கு அழைப்பாணை: ரூ.100 கோடி மோசடி வழக்கு விசாரணைக்கு வெள்ளிக்கிழமை (செப்.18) ஆஜராகும்படி அன்பில் மகேஸுக்கு சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் அழைப்பாணை வழங்கினர்.

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை: மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை/திருச்சி, செப். 16: முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவு: அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீதான சோதனை என்பது மற்றுமொரு திசைதிருப்பும், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை ஆகும். தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டால் பாதிக்கப்படும் மக்களின் போராட்டங்கள், பட்டினப்பாக்கம் மீனவர்கள் போராட்டம் உள்ளிட்ட மாநிலத்தை உலுக்கிவரும் எதையும் கண்டுகொள்ளாமல் லண்டனில் ஷூட்டிங் நடத்திக்கொண்டிருக்கிறார் முதல்வர்.

இந்தப் பிரச்னைகளைச் சரிசெய்ய முடியாத விரக்தியில், மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அன்பில் மகேஸ் பொய்யாமொழி மீது சோதனை அஸ்திரத்தை ஏவியுள்ளது தவெக அரசு. இந்த அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையை சட்டரீதியாக எதிர்கொள்வோம். எதிர்க்கட்சி மீது சோதனை நடத்துவதால் மக்கள் கோபத்தைத் தணிக்க முடியாது. பொய்யான குற்றச்சாட்டுகளும் சட்டத்தின் முன் நிலைக்காது என்பதை இந்த அரசு விரைவில் உணரும் எனப் பதிவிட்டுள்ளார் அவர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி– அன்பில் மகேஸ்: திருச்சியில் போலீஸாரின் சோதனை நிறைவடைந்த பின்னர் அன்பில் மகேஸ் கூறியதாவது:

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இச் சோதனை நடைபெற்றது. எங்களுக்கு மடியில் கனமில்லை. எனவே, வழியில் பயமில்லை. சட்டப்பேரவையிலும், மக்கள் மன்றத்திலும் தவெக அரசுக்கு எதிராகப் பேசினாலே சோதனை என்பது வழக்கமாகிவிட்டது.

வெள்ளிக்கிழமை சென்னை சென்று விசாரணையை எதிர்கொண்டு உரிய விளக்கம் அளிப்பேன். காவல் துறை தங்களது பணியைச் சரியாக செய்ய வேண்டும். 'இலக்கு நீங்கள் கிடையாது; அவர்தான். அவர் பெயரைச் சொல்லுங்கள்; உங்களை விட்டுவிடுகிறோம்' என்ற வகையில் விசாரணை நடத்தக் கூடாது என்றார் அவர்.

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
2வது தளம், செஞ்சிலுவைக் கட்டிடம், # 32, செஞ்சிலுவைச் சாலை, எழும்பூர், சென்னை-600008
Ph: 044-28881082. E-mail: sbi.05170@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரம்: திரு. பார்த்தசாரதி.C கைபேசி: 9444719444 - தொலைபேசி: 044-28881034

நகர வழக்கு அதிகாரியின் பெயர் : திரு. S.விஜயகுமார் - மொபைல்: 9003664472, தொலைபேசி: 044-28881053

அசையா சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) வரைதுகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. சென்னை, பாரத ஸ்டேட் வங்கி, ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளைக்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

வ.எண்.1: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு. அபு பாபு முகமது சஃபி, த/பெ.திரு.V.S.A பாபு, திருமதி. S. நதீரா, க/பெ.திரு. அபு பாபு முகமது சஃபி, இருவரின் குடியிருப்பு முகவரி: எண்:6, முத்தமிழ் நகர், ஜாகிர் உசேன் தெரு, பம்மல், நல்லதம்பி சாலைக்கு அருகில், சென்னை – 600 075. மேலும் ஒரு முகவரி: New Solution Logistics, எண்:6, முத்தமிழ் நகர், ஜாகிர் உசேன் தெரு, பம்மல், நல்லதம்பி சாலைக்கு அருகில், சென்னை – 600 075. திரு. அபு பாபு முகமது சஃபி, த/பெ.திரு.V.S.A பாபு, எண்.1, கம்பர் தெரு, முத்தமிழ் நகர், பம்மல், ஃபிளாட் எண்.S-9, 2வது தளம், S.S பாரடைஸ் அப்பார்ட்மெண்ட், மனை எண்.5, கம்பர் தெரு, பம்மல் சென்னை-600 075.

நிலுவைத் தொகை: 15.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 1,06,00,000/-** (ரூபாய் ஒரு கோடியே ஆறு இலட்சம் மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள். **சுவாதீன நிலை :** மெய்நிலை சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: முதன்மை பிணைச்சொத்துக்கள்: அட்டவணை A (மொத்த சொத்து): தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், பம்மல் நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட பம்மல் கிராமத்தின் சர்வே எண்.46/1, பட்டா எண்.937 இன்படி புதிய சர்வே எண்.46/29 இல் அடங்கிய (சென்னை -75, பம்மல் நகராட்சி, ஆணையாளர், உறுப்பினர் செயலாளருக்காக 04/06/2012 தேதியிட்ட கடித எண்.1598/2012, துணைப்பிரிவு அங்கீகாரத் திட்ட அனுமதி எண்.72/2012) சென்னை–600 075, பம்மல், முத்தமிழ் நகர் கம்பர் தெருவில் அமைந்துள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3066ச.அடி முறையே மனை எண்.5A இன் விஸ்தீரணம் 1651ச.அடி மற்றும் மனை B இன் விஸ்தீரணம் 1415ச.அடி காலி வீட்டு நிலம் மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.1; தெற்கில்: 24அடி அகல சாலை (கம்பர் தெரு); கிழக்கில்: மனை எண்.6; மேற்கில்: கால்வாய்; **நாற்புறங்கள்:** கிழக்கு மேற்காக வட புறம்: 40அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 47அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 71அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 70அடி; **அட்டவணை B (இதன் மூலம் தெரிவிக்கப்பட்டது)** மேற்குறிப்பிட்ட அட்டவணை 'A' சொத்தில் விவரிக்கப்பட்ட 3066ச.அடியில் விருப்பம், உரிமை மற்றும் பத்திரத்தின்படி பிரிக்கப்படாத பங்கு 499ச.அடி நிலம். **அட்டவணை C** சென்னை – 600 075, பம்மல், கம்பர் தெரு, மனை எண்.5 இல் அமைந்துள்ள S.S பாரடைஸ் என்ற பெயரில் உள்ள அப்பார்ட்மெண்ட்டில் இரண்டாம் தளத்தில் உள்ள (கிழக்கு முகமாக உள்ள) குடியிருப்பு ஃபிளாட் எண்.S-9 , **CERSAI: 200019894710. Latitude:12.974333, Longitude:80.140556**

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வுத் தொகை
₹ 46,00,000/-	₹ 4,60,000/-	₹ 10,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் **26.09.2026 & 28.09.2026** - நேரம்: காலை 11 முதல் மதியம் 1 வரை

வ.எண்.2: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு. அஹமத் ஆசிக், த/பெ. ஹாஜாமைதீன், 4/4, ஜவஹர் தெரு, சாக்கியப்பள்ளி நீடூர் அஞ்சல், திருஇண்டலூர், நாகப்பட்டினம், தமிழ்நாடு-609001. மேலும் ஓர் முகவரி: வில்லா எண். MIDAS 34, The White Villas - Oragadam, மனை எண். 17B, அன்னை பத்மாவதி நகர், பெருமாள்தாங்கல் கிராமம், கிராம எண்.59, சென்னை-603204.

நிலுவைத் தொகை: 15.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 52,37,868/-** (ரூபாய் ஐம்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து ஏழு ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து எட்டு மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள். **சுவாதீன நிலை :** அடையாளப்பூர்வ சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: முதன்மை பிணைச்சொத்துக்கள்: அட்டவணை A (மொத்த சொத்து): காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், (கிராம எண்.59) பெருமாள்தாங்கல் கிராமம், சர்வே எண்.1A/8 இல் அடங்கிய, துணைப்பிரிவு அங்கீகார எண்.30/2017 கடித எண். ROC. 21811/88 LA இன்படி DTCP எண் LP/DTCP 177/88 இன்படி அங்கீகாரம்பெற்ற மனைப்பிரிவு "அன்னை பத்மாவதி நகர்", மனை எண்.17B இன் கூட்டுப்பரப்பளவு 629 சதுர அடி விஸ்தீரணங்கொண்ட காலி நிலம் அதனுடன் பரப்பளவு 96சதுர அடி பொது நடைவழி உபயோக உரிமை மொத்தம் 725சதுர அடி அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.17C; தெற்கில்: மனை எண்.17A; மேற்கில்: 16அடி அகல சாலை; கிழக்கில்: மனை எண்.18A & 18B; நாற்புறங்கள்: கிழக்கு மேற்காக வடபுறம்: 32'-0"; கிழக்கு மேற்காக தென்புறம்: 32'-0"; வடக்குத் தெற்காக மேற்குபுறம்: 19'-8"; வடக்குத் தெற்காக கிழக்குபுறம்: 19'-8"; மொத்த விஸ்தீரணம்: மனையின் பரப்பளவு 629சதுர அடி, பொது உபயோக பரப்பு 96சதுர அடி (UDS) மொத்தம்: 725சதுர அடி. **அட்டவணை-B (வில்லாவின் விளக்கம்):** அட்டவணை 'A' சொத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வில்லா "The White Villas-Oragadam", இல் உள்ள G+1 தளத்தின் கட்டிடப்பரப்பு 780சதுர அடி கட்டிடப்பரப்பு கொண்ட வில்லா எண்."Midas 34".**CERSAI DETAILS: ASSET ID – 200232801127. Latitude:12.812680, Longitude:79.974480**

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வுத் தொகை
₹ 30,00,000/-	₹ 3,00,000/-	₹ 10,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் **26.09.2026 & 28.09.2026** - நேரம்: காலை 11 முதல் மதியம் 1 வரை

வ.எண்.3: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு.பிரகாஷ். S, த/பெ. M.சண்முகம், முகவரி:1) எண்:4/60, ஜி.கே.எம் காலனி, 4வது தெரு, ஜவஹர் நகர், பெரவள்ளூர், சென்னை600 082. முகவரி:2) Computer Sciences Corporation India Pvt Ltd., 7வது தளம், பிளாக் 1B, DLF IT பார்க், சிவாஜி கார்டன், நந்தம்பாக்கம், ராமாபுரம், சென்னை – 600089. முகவரி:3) மனை எண்.2, G1, தரைதளம், அண்ணாநகர் முதல் தெரு, முன்னாள் ரெட்டி 3வது குறுக்கு தெரு என பெயரிடப்பட்டது, மாதவரம், தாம்பரம் மேம்பாலத்திற்கு அருகில், சென்னை – 600060.

நிலுவைத் தொகை: 15.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 81,56,003/-** (ரூபாய் எண்பத்து ஓர் இலட்சத்து ஐம்பத்து ஆறு ஆயிரத்து மூன்று மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள். **சுவாதீன நிலை :** மெய்நிலை சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: முதன்மை பிணைச்சொத்துக்கள்: அட்டவணை A (மொத்த சொத்து): வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதவரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் கிராமத்தின் சர்வே எண்:611/1B1A, 09.12.2012 தேதியிட்ட பட்டா எண்:TK8A/1663/1420 இன் படி நகர சர்வே எண்:17/4, வார்டு-C, பிளாக் எண்:3 ஆகியவற்றில் அடங்கிய மேட்டுப்பாளையம், முன்னாள் ரெட்டி IIIவது குறுக்கு தெரு, அண்ணா நகர், முதல் தெரு மனை எண்:2 இல் உள்ள 2190ச.அடி விஸ்தீரணம் கொண்ட காலி நிலம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி அதன் **அளவைகள்:** கிழக்கிலிருந்து மேற்காக வட புறம்: 87அடி; கிழக்கிலிருந்து மேற்காக தென் புறம்: 95 அடி 6 அங்குலம்; வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு புறம்: 24அடி; வடக்கிலிருந்து தெற்காக மேற்கு புறம்: 24 அடி. அதற்கான **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்:1; தெற்கில்: மனை எண்:3; கிழக்கில்: சர்வே எண்:611/1B18; மேற்கில்: சர்வே எண்: 611/1A1. **அட்டவணை B :** மேற்குறிப்பிட்ட அட்டவணை "A" இன் குறிப்பிட்ட (2190 ச.அடியில்) நிலத்தில் 438ச.அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **அட்டவணை C:** "வேதாத்ரி ஃபிளாட்ஸ்" எனும் கட்டிடத்தின் தரை தளத்தில் உள்ள 922ச.அடி (பொதுப்பரப்பு உட்பட) கொண்ட குடியிருப்பு ஃபிளாட் எண்.GF-1. **CERSAI DETAILS: ASSET ID – 200063264520; Latitude:13.157250, Longitude:80.211833**

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வுத் தொகை
₹ 36,00,000/-	₹ 3,60,000/-	₹ 10,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் **03.10.2026 & 10.10.2026** - நேரம்: காலை 11 முதல் மதியம் 1 வரை

மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண்.1, 2 & 3 — **15.10.2026** — நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து நாடப்படும்).

வ.எண்.4: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு.S.சீதாராமன், த/பெ. திரு. சந்தரபாண்டியன், முகவரி:1) எண்.85/44, TTK சாலை, ஆழ்வார்பேட்டை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. முகவரி:2) ஃபிளாட் எண்.A-6, மதிஸ் வர்ஷம் மனை எண். 158, பொமுனா பிரதான சாலை, திருக்கச்சூர், மறைமலை நகர், சென்னை 603209 செங்கல்பட்டு வட்டம், முகவரி.3) M/s Refresh Hospitality Services, எண்.275, "Statesman one" R K Mutt சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004

நிலுவைத் தொகை: 15.09.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 81,56,003/-** (ரூபாய் எண்பத்து ஓர் இலட்சத்து ஐம்பத்து ஆறு ஆயிரத்து மூன்று மட்டும்) அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள். **சுவாதீன நிலை :** மெய்நிலை சுவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: முதன்மை பிணைச்சொத்துக்கள்: அட்டவணை A (மொத்த சொத்து): செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் இணை-II செங்கல்பட்டு சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், **திருக்கச்சூர் கிராமம்**, பழைய சர்வே எண்.526A/1C, பட்டா எண்.2440 இன்படி புதிய சர்வே எண்.526A/1C2, (27.05.2015 தேதியிட்ட மறைமலை நகர் நகராட்சியால் வழங்கப்பட்டத் திட்ட அனுமதி மற்றும் கட்டிடத் திட்ட அங்கீகாரம் B.A. எண்.213/2015 & D.Dis எண்.2123/14/A1 & 10.10.2014 தேதியிட்ட செங்கல்பட்டு, நகரத் திட்ட ஆணையத்தின் அங்கீகார எண்.3421/14 இன்படி) இல் அடங்கிய காலி நிலத்தின் பரப்பளவு 13952சதுர அடி சொத்து, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.526A/1A1பகுதி, 526 A/13 முதல் 16பகுதி வரை & தற்போதுள்ள சாலை; தெற்கில்: சர்வே எண்.526/A1D; கிழக்கில்: சர்வே எண்.526A/12பகுதி மற்றும் 526 A/18 பகுதி & தற்போதுள்ள சாலை; மேற்கில்: சர்வே எண்.526 A/1C, **அட்டவணை B:** (விற்பனை ஆவணத்தின் கீழ் உள்ள சொத்து) அட்டவணை "A" சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 13952 சதுர அடி மொத்தமுள்ள நிலத்தில் பிரிக்கப்படாத பங்கு 441ச.அடி நிலம் மற்றும் (செங்கல்பட்டு, நகர திட்ட ஆணையத்தின் 27.05.2015 தேதியிட்ட B.A. எண்.213/2015 & D.Dis எண்.2123/14/A1 இன்படி 10.10.2014 தேதியிட்ட அங்கீகார எண்.3421/14 இன்படி அங்கீகாரம் பெற்ற) தரை தளத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு கார் நிறுத்தும் இடம், (பொதுப் பரப்பு உட்பட) முதல் தளத்தில் உள்ள 1161ச.அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃபிளாட்.A-6. **CERSAI DETAILS: ASSET ID – 200032843448; Latitude:12.784917, Longitude:80.010194**

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வுத் தொகை
₹ 32,00,000/-	₹ 3,20,000/-	₹ 10,000/-

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் **04.10.2026 & 12.10.2026** - நேரம்: காலை 11 முதல் மதியம் 1 வரை

மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண்.4 — **30.10.2026** — நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து நாடப்படும்).

வங்கிக்குத் தெரிந்தவரை சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை
விருப்பமுள்ள ஏலதாரர்கள், BAANKNET.COM உடன் முன் ஏல டேவணித் தொகையை மின்னணு ஏல முடிவு வரை செலுத்தவும்.
விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com/eauction என்ற இணையதளத்தில் காணலாம்.

இடம்: சென்னை
தேதி: 15.09.2026

அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB, சென்னை

HDB FINANCIAL SERVICES
HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.
பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09.
மண்டல அலுவலகம்: மண்டல அலுவலகம்: தரைத் தளம், ஜெனித் ஹவுஸ், கேஷவ்ராவ் கத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலஷ்மி, மும்பை-34. தொ.பே.: 022-39586300. அதிகாரப்பூர்வ அலுவலர்: M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிட். பழைய எண் 64, புதிய எண் 84, MNO வளாகம், 1ஆவது தளம், HDB டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006.

மின்-ஏல விற்பனை அறிவிப்பு

(பெறுநர்: கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பரவலாக பொதுமக்கள்)
(சர்ஃபாசி சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பின்வரும் சொத்தை கீழ்க்காணும் கடன் கணக்குகாக **"உள்ளது உள்ள இடத்தில் & உள்ளது உள்ளபடி"** எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் சுவாதீனம் செய்துள்ளார்.

விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. தீபிகா ராஜேந்திரன், 87 பெருமாள் கோவில் தெரு, கம்மவார்பாளையம், பெரும்பேடு, பொன்னேரி - 601204, தமிழ்நாடு. **2. F. பால்பாண்டி,** 87 பெருமாள் கோவில் தெரு, கம்மவார்பாளையம், பெரும்பேடு, பொன்னேரி - 601204, தமிழ்நாடு. **கணக்கு எண்: 44605710. மொத்த நிலுவைத்தொகை: 15.09.2026 அன்றுள்ளபடி : ரூ.39,25,986.33/- (ரூபாய் முப்பத்தொன்பது லட்சத்து இருபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தாறு மற்றும் முப்பத்து மூன்று பைசா மட்டும்)** அத்துடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள். **ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: --- ஏதும் இல்லை.**

அசையாச் சொத்து விபரங்கள்- கடனீட்டு சொத்துக்கள் அட்டவணை -I: இன்றியமையாப் பகுதிகள் மற்றும் பாகங்கள் அனைத்துடனும் கூடிய நிலம் அமைவிடம் - பழைய சர்வே எண் 1018/4, 1018/5 மற்றும் புதிய சர்வே எண் 1018/4A1, 1018/5A1 பரப்பளவு 5450 சதுர அடி (மனை அளவின்படி 4410 சதுர அடி) இது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பெரும்பேடு கிராமத்தில் அமைந்துள்ளது . அளவீடுகள்: கிழமேல் வடபுறம், கிழமேல் தென்புறம், தென்வடல் கிழபுறம், தென்வடல் மேல்புறம். இது திருவள்ளூர் சார் பதிவு மாவட்டம், பெரும்பேடு கிராமத்தில் அமைந்துள்ளது இதன் எல்லைகள்: **வடக்கு** - திரு. டில்லி அவர்களின் நிலம் மற்றும் கட்டிடம்; **தெற்கு** - திரு. பாலகிருஷ்ணா நாயுடு அவர்களின் நிலம்; **கிழக்கு** - பொதுப் பாதை; **மேற்கு** - திரு. பாலகிருஷ்ணா நாயுடு அவர்களின் நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.49,42,000/-	ரூ.4,94,200/-	ரூ.50,000/-	22.10.2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிட நீட்டிப்புடன்	21.10.2026 மாலை 05.00 மணி வரை

ஏல விற்பனையுடன் கூடிய ஒப்பந்தப்புள்ளியின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏல விற்பனையானது 'இணைய வழி மின்-ஏல' முறையில் https://www.bankeauctions.com **இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும். 2.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் https://www.bankeauctions.com இணையத் தளத்தில் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தி டேவணித்தொகையைச் செலுத்தலாம் (https://www.bankeauctions.com இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையைக் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% எனும் அளவில் "HDB Financial Service Limited" எனும் பெயரிலான செலுத்தாணை (Order) / கேட்பு வரைவோலை (DD) வடிவில் செலுத்த வேண்டும். இணையத் தளத்தில் தன்னைப் பதிவு (ஒருமுறை) செய்து கொண்ட பின்பு ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் ஏல ஆவணத்தைத் தாக்கல் செய்தவற்கான கடைசி நாளுக்கும் நேரத்துக்கும் முன்னதாகப் பின்வரும் ஆவண நகல்களை இணையத் தளத்தில் பதிவேற்ற வேண்டும். அவையாவன: i) NEFT/RTGS செலுத்துச்சீட்டு நகல் அல்லது கேட்பு வரைவோலை, ii) நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை நகல், iii) அடையாளச் சான்று / முகவரிச் சான்று [வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் (KYC) எனும் வகையில்] அஃதாவது சுயசான்றொப்பம் செய்யப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை நகல் / ஓட்டுநர் உரிம நகல் / கடவுச்சீட்டு நகல். இவை இல்லாமல் வரும் ஏலப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். இவை தவிர, பின்னிணைப்பு-II & III ஆகியவற்றின் (இவற்றை https://www.bankeauctions.com இணையத் தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்) ஒளிவருடல் நகல்களை (scanned copies) முறையாக நிரப்பிக் கையொப்பமிட்டுப் பதிவேற்றுவதும்கூட அவசியமாகும். பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் போன்றவற்றுக்கு உதவி தேவைப்படுகிற மற்றும் இணைய வழி உள் ஏலக்கோரலுக்கான பயிற்சி / செய்முறை விளக்கம் தேவைப்படுகிற ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்க: **M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், பிட்லிங் எண். 301, குர்கான், ஹரியாணா - 122 015 மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com உதவிக்கான எண்கள். 124-4302020 / 21 / 22 / 23, 72919 81124 / 1125 / 1126, விற்பனை விசாரணைகள்: மின்னஞ்சல் முகவரி - sales@bankeauctions.com, 72919 81129. 3.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலத்துக்கு நேரிடையாக வந்து தாங்களே தனிப்பட்ட முறையில் கலந்து கொள்வதோடு தாங்கள் தங்களுக்காகத்தான் ஏலத்தில் கலந்து கொள்வதாக எழுத்துப்பூர்வமாக பிரகடன அறிக்கை (declaration) தர வேண்டும். தன் சார்பாக அதிகாரப்பூர்வ நபரை அனுப்பி வைப்பது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **4.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தைப் பெற அணுக வேண்டியவர்: அதிகாரப்பூர்வ அலுவலர் : **M/s. HDB ஃபைனான்சியல் HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண் 64, புதிய எண் 84, MNO வளாகம், 1ஆவது தளம், HDB டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006. ஏலம் நடைபெறும் இடம்: M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். பழைய எண் 64, புதிய எண் 84, MNO வளாகம், 1ஆவது தளம், HDB டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006. 5.** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனையில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிப் படிவத்தை மட்டும் பயன்படுத்தி நிரப்பப்பட்ட தங்கள் ஏலப்புள்ளிகளை உறையிலிட்டு மூடி முத்திரையிடடு அதிகாரப்பூர்வ அலுவலர், **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** என உறையின் மேல் எழுதி குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையை **"HDB Financial Service Limited"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட செலுத்து ஆணை (PO) / கேட்பு வரைவோலை (DD) இணைத்து **21.10.2026 அன்று மாலை 05.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ** சமர்ப்பிக்க வேண்டும். **6.** சொத்து ஆய்வு மற்றும் இதர விவரங்களுக்கு ஆர்வமுள்ள ஏலதாரர் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்: **M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிட்., பழைய எண் 64, புதிய எண் 84, MNO வளாகம், 1ஆவது தளம், HDB டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006. சண்முகம்** K (9597065780) & **கோபி** S (9884451533), சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி"** எனும் நிபந்தனைகள் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **7.** இங்கே அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏல விற்பனைக்கான, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் **22.10.2026 அன்று காலை 11:00** மணிக்குத் திறக்கப்படும். பொதுவாக ஏலமானது மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக நடைபெறும் என்றாலும்கூட, மூடியுள்ள ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகையை விடக் கூடுதலாக ஏலம் கோர விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கிடையே அதிகாரப்பூர்வ அலுவலர் தனது விருப்புரிமையின் பேரில் வெளிப்படையான ஏலத்தை நடத்தக்கூடும். அப்படி நடந்தால் அந்த நேரத்தில் உச்சபட்சத் தொகைக்கு ஏலம் கோருபவருக்கே விற்பனை முடிவு செய்யப்பெறும். எப்படி இருந்தாலும் விற்பனையானது **HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெடின்** உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டது. **8.** வெற்றி பெறும் ஏலதாரர் விற்பனைத் தொகையில் 25%-ஐ (டேவணித்தொகை உட்பட) விற்பனை முடிந்த உடன் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு முன்னதாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாள்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறினால் முதலில் செலுத்தப்பட்ட 25% தொகை பறிமுதல் செய்யப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இது திருப்பித் தரப்படமாட்டாது. ஒருவேளை வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே குறிப்பிட்டபடி மொத்த விற்பனைத் தொகையின் 25%-ஐச் செலுத்தத் தவறினால், அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவர் பரிசீலிக்கப்பட்டு அவருக்கு விற்பனையை உறுதி செய்ய முடிவெடுக்கப்படும். **9.** இங்கே குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் விற்பனை விலை முழுமையாகப் பெறப்பட்ட பின்னரே விற்பனைச் சான்றிதழானது வெற்றி பெற்ற வாங்குநரின் பெயரில் அதிகாரப்பூர்வ அலுவலரால் வழங்கப்படும். **10.** பெயர் மாற்றத்துக்காகச் சட்டப்படி செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் முதலான கட்டணங்கள் வெற்றி பெறும் வாங்குநரையே சாரும். **11.** .சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைகளான (சட்டப்படியான வீட்டு வரி, மின்சாரக் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) வருமான வரி பிடித்தம் (TDS), சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஏதேனும் அரசுக்கு, அரசின் கீழான அமைப்புகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரரே செலுத்த வேண்டும். **12.** எந்தக் காரணமும் சொல்லாமல், ஏலப்புள்ளியையோ ஒப்பந்தப்புள்ளியையோ எந்த ஒரு விலைகோரலையுமோ அனைத்து விலைகோரல்களையுமோ ஏற்க அல்லது தள்ளுபடி செய்ய அல்லது ஏலத்தைத் தள்ளி வைக்க / ஒத்தி வைக்க / ரத்து செய்யவும், எந்தக் காரணமும் சொல்லாமல் விற்பனையின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மாற்றவும் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

நாள்: 17.09.2026, இடம்: சென்னை — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்

SUNDARAM HOME
— Sundaram Finance Group —
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600002.
பெருநிறுவன அலுவலகம்: சுந்தரம் டவர்ஸ், எண். 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600014.
கிளை அலுவலகம்: எண் 51, முதல் தளம், G S T சாலை (MIT பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை - 600 044.

சுவாதீன அறிவிப்பு

சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிற்சேர்க்கை IV மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8(1)-ன் கீழ் வெளியிடப்படுகிறது

இப்பவும், கீழே கையொப்பமிட்டுள்ளவர், **சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், (சர்ஃபாசி சட்டம்) பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 3-ன் (விதிகள்) கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டம் **பிரிவு 13(2)-ன் கீழ் 13-06-2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) கடன்தாரர் திரு. ஜெயச்சந்திரன் S, கூட்டுக்-கடன்தாரர் திருமதி. ரேவதி K** ஆகியோர்க்கு அனுப்பி, **கடன் கணக்கு எண் CHR20250032**-இன் கீழாக செலுத்த வேண்டியதும் அந்தக் கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதுமான **13/06/2026** அன்றுள்ளபடி **ரூ.52,00,242/- (ரூபாய் ஐம்பத்து இரண்டு லட்சத்து இருநூற்று நாற்பத்து இரண்டு மட்டும்)** இதனுடன் கடனை அடைக்கும் வரையிலான மேல் வட்டி மற்றும் இதர செலவினங்கள் ஏதேனும் இருந்தால் அவையும் சேர்த்து) தொகையை கடனைக் கட்டி முடிக்கும் வரையிலான மேல் வட்டி, செலவுகளுடன் ஏதேனும் கட்டணங்கள் கட்ட வேண்டியிருந்தால் அவற்றையும் சேர்த்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 01.07.2026 இல் இருந்து 60 நாள்களுக்குள் செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்(கள்) மேற்சொன்ன கடன் பாக்கியை முழுவதுமாகச் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்(களு)க்கும் பரவலாக பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய சர்ஃபாசி சட்டம் விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை 16.09.2026 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, முக்கியமாக கடன்தாரர்(களுக்கும்), பரவலாக பொது மக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்-க்குச்** செலுத்த வேண்டியுள்ள **16-09-2026** அன்றுள்ளபடியான கடன் பாக்கி **ரூ.53,50,285/- (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்று எண்பத்து ஐந்து மட்டும்)** மற்றும் இதைச் செலுத்தும் வரையிலான அதன் மீதான மேல் வட்டி செலவுகள் மற்றும் ஏதேனும் இதர கட்டணங்கள் இருந்தால் அவற்றையும் சேர்த்து முழுவதுமாகச் செலுத்தவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

சொத்து அட்டவணை: "VISHNU LUXE FLATS" என்ற கட்டடத்தின் மூன்றாம் தளத்தில் அமைந்துள்ள T-2 எண் கொண்ட குடியிருப்பு அபார்ட்மெண்ட் இதன் பரப்பளவு 1331 சதுர அடி ஆகும்; இதனுடன், மொத்தம் 3098 சதுர அடி நிலத்தில் அடங்கிய 513 சதுர அடி அளவுள்ள பிரிக்கப்படாத பங்கு நில உரிமையும் ஒரு கார் நிறுத்துமிடமும்) அடங்கும். அமைவிடம் தென்மேற்கு மூலையில் சாய்வு வெட்டு கொண்ட மனை எண் D; அமையப்பெற்ற சர்வே எண் 73/2B, பழைய பட்டா எண் 955 புதிய பட்டா எண் 8737 இன் படி, உட்பிரிவு எண் 73/2B2 அமைந்துள்ளது. இது காஞ்சிபுரம் மாவட்டம் (தற்போது செங்கல்பட்டு மாவட்டம்), தாம்பரம் வட்டம், செம்பாக்கம் கிராமம், களத்துமேடு தெருவில் அமைந்துள்ளது; இது தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் சேலையூர் சார்-பதிவு மாவட்ட எல்லைக்குள் வருகிறது. **எல்லைகள்;** வடக்கு - காலி நிலம்; தெற்கு - மனை எண் C; கிழக்கு - காலி நிலம்; மேற்கு - 20 அடி அகலமுள்ள சாலை. **அளவீடுகள்:** கிழமேல் வடக்குப் பக்கம் 80 அடி 6 அங்குலம், கிழமேல் தெற்குப் பக்கம் 71 அடி, தென்வடல் கிழக்குப் பக்கம் 36 அடி 10 1/2 அங்குலம், தென்வடல் மேற்குப் பக்கம் 30 அடி 9 அங்குலம் + 14 அடி 1 1/2 அங்குலம். லே அவுட் ஒப்புதல் மற்றும் திட்டமிடல் அனுமதி எண்: 453/2010, அலுவலகக் கடித எண்: PPA/412/2010, தேதி: 6.9.2010. கட்டடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட விவரம்: SR 009/CP/23-24/0035943, BPNo.009/BL/2023/03/039/01044.

நாள்: 16-09-2026 — சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்-க்காக அதிகாரபூர்வ அலுவலர்

ஞாயிற்றுக்கிழமைதோறும் **தினமணி கதிர்** இளமை! புதுமை! இனிமை!

RBL BANK
RBL வங்கி லிட்.
பதிவு அலுவலகம் : 1வது லேன், ஷாஹ்புரி, கோலாப்பூர் - 416001
கிளை அலுவலகம் : சாய் கல்யாணி டவர்ஸ், 105/56, G.N.செட்டி சாலை, தி.நகர், சென்னை, தமிழ்நாடு - 600017

மின்-ஏல விற்பனை அறிவிப்பு
(சர்ஃபாசி சட்டம், 2002 இன் கீழ்)

மின்-ஏல விற்பனை அறிவிப்பு. வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்ட அசையாச் சொத்தினை விற்பனை செய்வதற்காகக் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, ("விதிகள்") விதி 8(6)-இன் கீழானது

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர், ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், வங்கிக்கு வர வேண்டியுள்ள நிலுவைத்தொகையைக் கீழே விவரித்துள்ளபடி வட்டியுடன் திரும்பப் பெறும் பொருட்டு, RBL வங்கி லிட்., ("ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தார் / வங்கி") நிறுவனத்தாரிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் (இனி மொத்தமாகச் "சொத்து" எனக் குறிப்பிடப்படும்) சர்ஃபாசி சட்டப் பிரிவு 14 & உட்பிரிவு 13(4) மற்றும் அதன் கீழான விதிகள் ஆகியவற்றின்படி வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கீழே விவரித்துள்ள வகையில் **நேரடி சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டா"** எனும் முறையிலும் மேற்கண்ட விதிகளில் 8 & 9 ஆகியவற்றின்படி ஏலப்புள்ளிகளை வரவேற்றும் **22.10.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்கான மின்-ஏல அட்டவணை பின்வருமாறு:

கடன் தரப்பினர், நிலுவைத்தொகைகள் மற்றும் சொத்து ஆகியவற்றின் சுருக்கமான விவரம்:

வ. எண்	கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்(கள்) பெயர்	சொத்து விவரங்கள் & அடமானதாரர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை / சர்ஃபாசி சட்டத்தின் கீழான கோரிக்கை மற்றும் சுவாதீன அறிவிப்பு நாள்	ஆய்வு நாள் மற்றும் நேரம்	குறைந்தபட்ச கேட்பு விலை டேவணித்தொகை (EMD) ஏல உயர்வுத் தொகை	மின்-ஏல நாள் / நேரம்	ஆவணங்களுடன் விலைப் புள்ளிகள் பெறத்தக்க கடைசி நாள்	அதிகாரப்பூர்வ அலுவலர் பெயர் / தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி
1.	1. திரு. சீனிவாசன் R த/பெ. ராஜகோபால், கதவு எண். 22/3 புதிய எண். 91, பாளையக்கார தெரு, அயனாவரம், சென்னை, தமிழ்நாடு-600023, **இன்னொரு முகவரி:** எண் 9, சுபாஷ் சந்திரபோஸ் தெரு, ஆதனூர், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு - 603202, 2. **திருமதி S தையநாயகி க/பெ. சீனிவாசன் R,** வீட்டு எண் 22/3, புதிய எண் 91, பாளையக்கார தெரு, அயனாவரம், சென்னை, தமிழ்நாடு-600 023.	சொத்து உரிமையாளர்: திரு. R. சீனிவாசன் அட்டவணை சொத்து விவரம்: அட்டவணை "A" (முழுச் சொத்து): அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட காலி மனை: 2400 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண் 9, அமையப்பெற்ற பழைய சர்வே எண் 376/1C கூட்டுப் பட்டா எண் 613, புதிய சர்வே எண் 376/228 'திருமுருகன் நகர் பகுதி-I' என பெயரிடப்பட்ட லே அவுட்டில் உள்ளது C.R/D.T.C.P/84-157/131 எண் மூலம் அங்கீகரிக்கப்பட்டது. இது காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், எண் 193 ஆதனூர் கிராமத்தில் அமைந்துள்ளது , எல்லைகள்: **வடக்கு** - மனை எண் 18; **தெற்கு** - 40 அடி சாலை; **கிழக்கு** - மனை எண் 8; **மேற்கு** - மனை எண் 10. அளவீடுகள்: தென்வடல் கிழக்கு பக்கம் 60 அடி; தென்வடல் மேற்கு பக்கம் 60 அடி; கிழமேல் வடக்கு பக்கம் 40 அடி; கிழமேல தெற்கு பக்கம் 40 அடி. மொத்தம் 2400 சதுர அடி பரப்பளவு கொண்டது; இது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்-பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. 'அட்டவணை B'-இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து (இதன் மூலம் உரிமை மாற்றம் செய்யப்படும் சொத்து): 'அட்டவணை "A"-இல் உள்ள நிலத்தில் அடங்கிய 210 சதுர அடி பரப்பளவிலான பிரிக்கப்படாத பங்கு நில உரிமையும் அதனுடன் 524 சதுர அடி பரப்பளவு கொண்ட (அதாவது, 400 சதுர அடி கட்டுமானப் பரப்பளவு மற்றும் 124 சதுர அடி பொதுப் பயன்பாட்டுப் பரப்பு) ஃபிளாட் இது "VIBGYAR ENCLAVE" என்ற அடுக்குமாடிக் குடியிருப்பின் முதல் தளத்தில் அமைந்துள்ள ஃபிளாட் எண்.F3 ஆகும். இதனுடன் ஒரு கார் நிறுத்துமிடம், பொதுப் பயன்பாட்டுப் பகுதிகள், பொதுப் பாதைகள் மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகள் ஆகியவையும்; மேலும் மின்சாரப் பொருத்துதல்கள், மின் இணைப்புகள், குடிநீர் இணைப்பு உள்ளிட்ட வசதிகளும் இதில் அடங்கும்.	ரூ.24,58,878.96 (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து ஐம்பத்து எட்டு ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து எட்டு மற்றும் தொண்ணூற்று ஆறு பைசா மட்டும்) 13.04.2026 அன்றுள்ளபடி கோரிக்கை அறிவிப்பு நாள்: 13.04.2026 அடையாள சுவாதீன நாள்: 02.09.2026	14.10.2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 02.30 மணி வரை	ரூ. 23,00,000/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சம் மட்டும்). டேவணித் தொகை (EMD) : ரூ.2,30,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) ஏல உயர்வுத் தொகை: ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)	22.10.2026 அன்று முற்பகல் 11.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடங்கள் கால நீட்டிப்புடன்	21.10.2026 அன்று மாலை 05.00 மணி அல்லது அதற்குமுன்	குணசீலன் A / 9600144498 / gunaseelan.a@rbl.bank.in

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: (1) மின்-ஏல விற்பனையானது மின்-ஏல இணையத்தளத்தின் மூலம் இணைய வழியில் நடக்கும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்து மின்-ஏலத்தில் கலந்து கொள்ளும் முன்னர் ஏலத்தின் விரிவான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவை கிடைக்கும் இணையத்தளங்கள்: https://www.bankeauctions.com & https://www.rblbank.com/pdf-pages/news. **(2)** ஏலப்புள்ளியைத் தாக்கல் செய்யும் முன்பு சொத்து பற்றியும் அதன் விவரங்கள் குறித்தும் ஆய்வு செய்து மன நிறைவு கொள்ள வேண்டியது ஏலதாரர்களின் பொறுப்பு. **(3)** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் டேவணித்தொகை (EMD) விவரங்களையும் ஆவணங்களையும் https://www.bankeauctions.com இணையத்தளத்தின் வாயிலாகத் தங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தித் தாக்கல் செய்ய வேண்டும் (https://www.bankeauctions.com இணையத்தளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெறலாம்). டேவணித்தொகையை "Authorised Officer, RBL Bank Ltd." எனும் பெயரிலான அட்டவணையிடப்பட்ட வணிக வங்கியின் கேட்பு வரைவோலை (D.D) மூலம் **21.10.2026 அன்று அல்லது அதற்கு முன் மாலை 05:00 மணிக்குள் செலுத்த வேண்டும். (4)** ஆர்வமுள்ள ஏலதாரர்கள் **மின்-ஏலத்தில்** கலந்து கொள்வதற்கான உதவி / இணைய வழிப் பயிற்சி பெற அணுகுக: **M/s. C1 இந்தியா பிரைவேட் லிட்., தொடர்பு எண்கள்: 7291981124 / 25 / 26. தொடர்பு நபர்: திரு.பிரபாகரன், அலைபேசி எண்: 7418281709, மின்னஞ்சல் முகவரி:** delhi@c1india.com/ tn@c1india.com. சொத்து தொடர்பான கேள்விகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியவர்: **திரு. குணசீலன் A., அதிகாரப்பூர்வ அலுவலர் (அலைபேசி எண்: 9600144498, மின்னஞ்சல்:** gunaseelan.a@rbl.bank.in). **(5)** எந்தக் காரணமும் முன்வைக்காமல் எந்த ஏலப்புள்ளியையும் அல்லது எல்லா ஏலப்புள்ளிகளையும் ஏற்க அல்லது நிராகரிக்க மற்றும் / அல்லது ஏலத்தை எந்த நேரத்திலும் தள்ளி வைக்க / ரத்துச் செய்ய வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உரிமை உண்டு. இது தொடர்பாக அன்னாரின் முடிவே இறுதியானதும் அனைவரையும் கட்டுப்படுத்துவதும் ஆகும்.

சர்ஃபாசி சட்டம் 2002-இன் கீழ் சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர், ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு அறிவிப்பது யாதெனில் மேற்குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கல் வாங்கல் ஆவணங்களின்படி அதன் மேல் வட்டி, அபராத வட்டி, இதர வட்டி ஆகியவற்றுடனும் இதர தொகைகளுடனும் சேர்த்து மின்-ஏல நாளுக்கு முன் செலுத்தி விட வேண்டும். தவறினால் சொத்து ஏலம் விடப்பட்டு / விற்பனை செய்யப்பட்டு நிலுவைத் தொகைகள் திரும்பப் பெறப்படும்.

நாள்: 17.09.2026, இடம்: சென்னை — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், RBL வங்கி லிட்.